ந.க.எண். 455/நத4/2020
நாள். 07.05.2020

இயக்குநர் அலுவலகம்,
உள்ளாட்சி நிதித் தணிக்கை,
ஒருங்கிணைந்த நிதித் துறை வளாகம்,
4வது தளம், நந்தனம், சென்னை–35.

சுற்றறிக்கை எண்.10/2020

| | |
|---|---|
| பொருள் | தணிக்கை – உள்ளாட்சி நிதித் தணிக்கை கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கை – ஊரடங்கு காலத்தில் தணிக்கை பணி மேற்கொள்வது தொடர்பான நெறிமுறைகள் வெளியிடுவது – தொடர்பாக. |
| பார்வை | 1) அரசாணை (நிலை) எண்.217, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை (DM-II) துறை, நாள்.03.05.2020<br>2) தலைமை அலுவலக கடிதம் ந.க.எண்.ப&நி–1(2)/2362/2020, நாள்.04.05.2020<br>3) அரசாணை எண்.51, ப.ம.நி.சீ (S) துறை, நாள்.07.05.2020 |

பார்வை (1)ல் காணும் அரசாணையில் கொரோனா நோய் தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டினை மேற்கொள்ள 04.05.2020 முதல் 17.05.2020 வரை ஊரடங்கு நீட்டிப்பு செய்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை (2)ல் காணும் தலைமை அலுவலக கடிதத்தின் வழி ஊரடங்கு காலத்தில் சார்நிலை அலுவலகங்கள் செயல்படுவது மற்றும் தணிக்கைப் பணி மேற்கொள்வது தொடர்பாக ஏற்கனவே வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன.

மேற்குறிப்பிட்ட தலைமை அலுவலக கடிதத்தில் குறிப்பிட்ட ஊரடங்கு காலத்தில் தணிக்கை பணி மேற்கொள்வது தொடர்பாக வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளைத் தொடர்ந்து கீழ்காணும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1) அரசால் அறிவிக்கப்பட்ட ஊரடங்கு காலத்தில், பார்வை (2)ல் காணும் தலைமை அலுவலக கடிதத்தில் தணிக்கை பணிகள் குறித்த அறிவுரைகள் மட்டும் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும்.

2) ஊரடங்கு காலத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சென்று முகாம் பணி (தணிக்கை) மேற்கொள்வதை தவிர்க்கப்பட வேண்டும்.

3) பார்ாவை (3)ல் காணும் அரசாணையில் அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர்களுக்கான ஓய்வு பெறும் வயதினை 58 முதல் 59 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளதால், உள்ளாட்சி அமைப்புகளில் 31.05.2020 முதல் பணி ஓய்வு பெற உள்ள அலுவலர்களுக்கான வரவு–செலவு தணிக்கை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருமாயின் உடன் முடித்து தணிக்கை பத்திகளை உதவி இயக்குநரால் ஒப்புதல் அளிக்கப்பட்டு 2019–2020 ஆண்டு தணிக்கை அறிக்கையில் சேர்த்திட வேண்டும். இன்னமும் வரவு–செலவு தணிக்கை

த.பி.பா

துவங்கப்படாமல் உள்ள இனங்களுக்கு 2019–2020 ஆண்டுத் தணிக்கையுடன் சேர்த்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

4) அரசால் ஊரடங்கு முழுவதும் விலக்கிக் கொள்ளப்பட்டு பொதுப் போக்குவரத்து இயக்கப்படும் நாள் முதல் நகர்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் 2019–2020 ஆம் ஆண்டுத் தணிக்கை துவங்கப்பட்டு 31.12.2020க்குள் முடிக்கும் வகையில் பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

5) பின்வரும் செலவினத்தணிக்கை தொடர்பான தணிக்கை 100% தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(i) கொள்முதல் (Procurement) தொடர்பான செலவினங்களில்: ரூ.5.00 இலட்சத்துக்கும் மேலான செலவுச் சீட்டுகள்.
(ii) ஆண்டு பராமரிப்பு (AMC) தொடர்பான செலவினங்கள்: ரூ.2.00 இலட்சத்திற்கு மேல் உள்ளவை.
(iii) ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டது தொடர்பான கோப்புகள்.
(iv) முன்பணம் மற்றும் வைப்புத்தொகை தொடர்பான தணிக்கை.
(v) வேலைகள் தொடர்பான தணிக்கை மற்றும் பழுதுபார்த்தல் பணிகள் (Repair Works) தொடர்பான செலவுச் சீட்டுகள் தணிக்கையில் மாநகராட்சிகளை பொறுத்தமட்டில் ரூ.1.00 இலட்சத்திற்கு மேற்பட்ட செலவினம் மற்றும் நகராட்சிகளில் ரூ.50,000/–க்கு மேற்பட்ட செலவினம் உடைய செலவுச் சீட்டுகள் தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(vi) புதிய பணியிட நியமன கோப்புகள்

6) பின்வரும் இனங்கள் தொடர்பான செலவுச் சீட்டுகள் தணிக்கை தொடர்பா 2019–2020 தணிக்கையில் நேரடியாக செலவின பதிவேட்டில் தெரிவு செய்தால் போதுமானது என தெரிவிக்கப்படுகிறது.

(i) தொலைபேசி தொடர்பான செலவுச் சீட்டுகள் (Telephone Bill)
(ii) பயணப்பட்டியல் தொடர்பான செலவுச் சீட்டுகள் (TA Bill)
(iii) மின்பட்டியல் தொடர்பான செலவுச் சீட்டுகள் (EB Bill)
(iv) பணியமைப்பு தொடர்பான செலவுச் சீட்டுகள் (Establishment Voucher)
(v) சில்லறை செலவினம் தொடர்பான செலவுச் சீட்டுகள்(Contingency Voucher)
(vi) அஞ்சல்வில்லை தொடர்பான செலவுச் சீட்டுகள் (Postage Voucher)
(vii) வழிக்கறிஞர் கட்டணம் (Legal Charges)

7) பின்வரும் இனங்கள் தொடர்பான செலவுச் சீட்டுகள் தணிக்கையில் கீழ்குறிப்பிடப்பட்ட பகுதிகள் மட்டுமே தணிக்கையில் சரிபார்க்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது.

i) எரிபொருள் செலவினம் ((Fuel Charges Vouchers) தொடர்பான தணிக்கையில் ஐந்தில் ஒரு பகுதி வாகனங்கள் பொறுக்கு முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவ்வாகனம் தொடர்பான அனைத்து விவரங்களும் தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட வாகனம் தொடர்பான அனைத்து விவரங்களும் தணிக்கை செய்யப்பட்டது என்ற ''சான்று'' சம்பந்தப்பட்ட தணிக்கையாளரால் அளிக்கப்பட வேண்டும்.

ii) விதிமுறைகளுக்குட்பட்டு எழுதுபொருள் மற்றும் அச்சுபடிவங்கள் கொள்முதல் (Stationary and Printing) தொடர்பான செலவினத் தணிக்கையில் சம்பந்தப்பட்ட பொருள்கள் அதிக தொகை உள்ள இனங்கள் மட்டும் இருப்புப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளதா என்ற விபரம் சரிபார்த்தால் போதுமானது.

iii) விளம்பரம் தொடர்பான செலவுச் சீட்டுகள் (Vouchers related to Advertisement) தணிக்கையின்போது விளம்பரம் DIPR விலை விகிதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதா ? என்ற விவரம் சரிபார்த்தல் போதுமானது.

மேற்காணும் வழிமுறைகளை பின்பற்றி நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் 2019–2020 ஆம் ஆண்டு தணிக்கையினை 31.12.2020க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. இந்நடைமுறை 2019–2020 தணிக்கைக்கு மட்டுமே பொருந்தும் என்று மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

இச்சுற்றறிக்கை கிடைக்கப் பெற்றமைக்கு உடன் ஒப்புதல் அளித்தல் வேண்டும்.

ஒம்/–பொ.வேல்சாமி
இயக்குநர்

<u>பெறுநர்</u>:

அனைத்து மண்டல இணை இயக்குநர்கள்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை.

<u>நகல்</u> :

1) இயக்குநர் மேசைக்கு
2) இணை இயக்குநர் (தலைமையிடம்)
3) துணை இயக்குநர் (தலைமையிடம்)
4) உதவி இயக்குநர் (தணிக்கை / நிர்வாகம்)
5) நத/பே.த/ஊ.ஒ.த/ப.க.த – பிரிவு ஆய்வர்கள்

உபரி–5

//உண்மை நகல்//

[signature] 7/5/2020
ஆய்வர்–தலைமையிடம்